2012 மே 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன அந்தப் பாட்டு அவைக் குறிப்பிலிருந்து மொத்தமாக நீக்கப்படுகிறது. நான் சொன்னதையும் சேர்த்துதான்.

வினா வரிசை எண் 208, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

208—

சொந்தக் கட்டடம்

***4278—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சாள்புரம் ஊராட்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்திலுள்ள ஆச்சாள்புரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு அலுவலகத்துடன்கூடிய கிடங்கு கட்டுவதற்காக ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 30-11-2011-ல் ரூ.6 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதில் ரூ.3 இலட்சம் கடனாகவும், ரூ.1½ இலட்சம் பங்குத் தொகையாகவும், ரூ.1½ இலட்சம் மானியமாகவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, இச்சங்கத்திற்கு அலுவலகத்துடன்கூடிய கிடங்கு கட்டும் பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். சமநிலை சமுதாயம் உருவாக்கிட, இல்லாமை இல்லையென்றாகிட, சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வரும் திராவிட திருவிளக்கே! தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக்கிட திட்டங்கள் வகுத்து, செம்மைப்படுத்திடும் காவியத் தாயே! சரித்திரம் படைத்திட, சமத்துவம் நிலைத்திட நாளும் உழைப்பவரே! மக்கள் துயரத்தைத் துடைத்திட மகத்துவம் விளங்கிட மகிமை புரிபவரே! தமிழகத்தை முதல் மாநிலமாக்கிட சாதனை செய்பவரே! தரணி எங்கும் புகழ் படைத்திட்ட தங்கத் தாரகையே! கேட்டவுடனே வாரி வழங்குகின்ற வாழும் வள்ளலே! மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைக் காணிக்கையாக்கி அமருகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கோ. வெங்கடாஜலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லகுப்பம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, பழைய சூரமங்கலத்தில் நீண்ட காலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொந்தக் கட்டடம் கட்டித் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தச் சங்கத்திற்கு அடிமனை இருக்குமேயானால், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து வட்டியில்லா கடனும் அல்லது தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியால் பராமரிக்கப்படும் தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாகவும் அல்லது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்*

நடைமுறைப்படுத்தப்படும் மாவட்டங்களிலிருந்து, அந்த நிதியிலிருந்து மானியத்துடன் கடன் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தச் சங்கத்திற்கு சொந்த இடம் இல்லாமல் இருக்கும்பட்சத்தில், அதாவது அடிமனை இல்லாதபட்சத்தில் அந்தச் சங்கம் எந்த ஊராட்சிப் பகுதியில் இருக்கிறதோ அந்த ஊராட்சி மன்றம், அது இலவசமாக கொடுக்கின்ற அடிமனை அல்லது மாவட்ட வருவாய்த் துறையிலிருந்து கொடுக்கப்படுகின்ற இலவச இடம் அல்லது 99 வருடங்களுக்கு lease-க்கு கொடுப்பார்களேயானால், அந்த இடத்தில் மேற்கண்ட நிதியிலிருந்து அந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 209, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

209—

குடியிருப்புகள்

***7030—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வனப் பகுதிகளில் வாழ்ந்து வரும் மலைவாழ் மக்களுக்கு வனத் துறைமூலம் குடியிருப்புகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டிற்கு பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் மாநிலம் முழுவதும் உள்ள பழங்குடியினரின் அடிப்படைத் தேவைகளான வீட்டு வசதி,